


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (29.5.2023) டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், மிட்சுபா (Mitsuba) நிறுவனத்திற்கும் இடையே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கான உதிரி பாகங்களை தயாரிக்கும் மிட்சுபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன தொழிற்சாலையை 155 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, மிட்சுபா இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் கோஜி மிசுனோ (Mr. Koji Mizuno) ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் நாட்டின் முக்கிய நிறுவனங்களின் தலைவர்களுடனான மதிய உணவு சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாடினார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, Ehime Prefecture துணை ஆளுநர் ஹிதேகி தனாகா (Hideki Tanaka), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் மாசாயுகி டகா (Masayuki Taga) மற்றும் ஜப்பான் நாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் – டோக்கியோவில்

# 6 நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

டோக்கியோ, மே.30–

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.**

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜப்பானில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று (29.5.2023) காலை டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்படும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைக் கலந்து கொள்ளவும் கேட்டு அழைப்பு விடுத்தார்.

அதனை தொடர்ந்து நேற்று மாலை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்து ணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்:**

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கியோகுட்டோ சாட்ராக் (KyoKuto Satrac) நிறுவனத்திற்கும் இடையே, காஞ்சிபுரம் மாவட்டம், மாம்பாக்கத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 13 ஏக்கர் நிலப் பரப்பில், 113 கோடியே 90 இலட்சம் ரூபாய் முதலீட்டில் டிரக் வாகனங்களுக்கான பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான புதிய ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், மிட்சுபா (Mitsuba) நிறுவனத்திற்கும் இடையே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கான உதிரி பாகங்களை தயாரிக்கும் மிட்சுபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன தொழிற்சாலையை 155 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஷிமிசு (Shimizu Corporation) நிறுவனத்திற்கும் இடையே, கட்டுமானம், கட்டுமான பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தை தமிழ்நாட்டில் மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கோயீ (Kohyei) நிறுவனத்திற்கும் இடையே, 200 கோடி ரூபாய் முதலீட்டில், பாலிகார்பனேட் தாள் தயாரித்தல், கூரை அமைப்புகள் தயாரித்தல், கட்டுமானத் துறையில் பயன்படுத்த எலக்ட்ரானிக் கூறுகளுக்கான எக்ஸ்ட்ருஷன் லைன்கள் (extrusion lines for electronic components for use in construction industry) ஆகியவற்றை தயாரிப்பதற்கான தொழிற்சாலை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சடோஷோஜி மெட்டல் வர்க்ஸ் (SatoShoji Metal Works) நிறுவனத்திற்கும் இடையே, 200 கோடி ரூபாய் முதலீட்டில் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் கட்டுமான உபகரணங்கள் துறையில் பயன்படுத்தப்படும் உயர்தர எஃகு பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், டஃப்ல் (Tofle) நிறுவனத்திற்கும் இடையே, 150 கோடி ரூபாய் முதலீட்டில் சோலார், எஃகு ஆலைகள், விண்வெளி மற்றும் குறைக்கடத்தி தொழில்களுக்கான துருப்பிடிக்காத எஃகு சிறப்பு நெகிழ்வான குழல்களை உற்பத்தி (stainless steel specialized flexible hoses) செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

என மொத்தம் 818.90 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, கியோகுட்டோ சாட்ராக் நிறுவனத்தின் தலைவர் சடோஷி ஒகோமோட்டோ (Mr. Satoshi Okamoto), மிட்சுபா இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் கோஜி மிசுனோ (Mr. Koji Mizuno), ஷிமிசு நிறுவனத்தின் துணை பொது மேலாளர் ஹிடோஷி இசாவா (Mr. Hitoshi Iizawa), துணை இயக்குநர் மட்சுனாகா கசுநோரி (Mr. Matsunaga Kazunori), பாலிஹோஸ் நிறுவனத்தின் கூட்டு நிறுவனங் களான கோயீ நிறுவனத்தின் தலைவர் யோஷிஹிகோ சுஷிஹாசி (Mr. Yoshihiko Tsuchihashi), சடோஷோஜி மெட்டல் வர்க்ஸ் நிறுவனத்தின் பிரிவு மேலாளர் அகினோ மியாசி (Mr. Akinao Miyauchi), டஃப்ல் நிறுவனத்தின் செயல் அலுவலர் யோச்சி ஓடா (Mr. Yoichi Oda), பாலிஹோஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஒய்.ஜெ. ஷபீர், இயக்குநர் ஹதிம் ஷபீர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் உற்பத்திக்கான மையத்தை அமைத்திட வேண்டும்!

## ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

டோக்கியோ, மே 30 –

“திறன் மிக்க மனித வளம் உள்ளதால் தமிழ்நாட்டில் உற்பத்திக்கான மையத்தை அமைத்திட வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புத் தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண் டுள்ளார். 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு, 25.5.2023 அன்று ஜப்பான் நாட்டின் ஒசாகா சென்றார்.

தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் ஒசாகா பயணத்தை முடித்துக் கொண்டு 27.5.2023 அன்று டோக்கியோ வந்தடைந்தார். இந்த அரசு முறை பயணங்களின் போது முதலமைச்சர் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, நேற்று (29.5.2023) காலை டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு (Japan External Trade Organization – JETRO) தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ (Mr. Ishiguro Norihiko) அவர்களையும், செயல் துணைத் தலைவர் கசுயா நகஜோ (Mr. Kazuya Nakajo) அவர்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு தமிழ் நாட்டில் தொழில் தொடங்குவதற்கு அளித்துவரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்து, தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.

JETRO தலைவருடனான சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:–

வணக்கம், உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. நீங்கள் இதற்கு முன்பு NECஇல் பணியாற்றியதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் நாடு திரும்பும் முன்பு, நாளை அங்கு சென்று பார்வையிடலாம் என்று நினைக்கிறோம். JETRO இந்தியாவுடன் இணைந்து மிகவும் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க விரும்பும் ஜப்பானிய நிறுவனங்கள் தங்களது வர்த்தகச் செயல்பாடுகளை எளிதில் மேற்கொள்ள முக்கியப் பங்கை ஆற்றி வந்துள்ளது. இதனை மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஆட்டோமொபைல், கனரக பொறியியல் உள்ளிட்ட துறைகளுக்கும் விரிவுபடுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

Industry 4.0ஐ நோக்கி தமிழ்நாட்டில் உள்ள அதிக அளவிலான சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முன்னேற்ற இந்தியாவின் ஐ.டி. திறன்களும் ஜப்பானின் உற்பத்தி நிபுணத்து வமும் உதவும். இதைப் போன்ற துறைகளில் நாம் ஒன்றிணைந்து செயல்பட முடியும் என நான் நம்புகிறேன் என்றார்.

இச்சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள், மேம்பட்ட உற்பத்தியில் சிறந்த பங்குதாரர் கள் ஜப்பானியர்கள். எனவே, தமிழ்நாட்டில் திறன்மிகுந்த மனிதவளம் உள்ளதால் 4.0 போன்ற தொழில்நுட்பப் பகுதிகள் மற்றும் மேம்பட்ட உற்பத்திக்கான ஒரு மையத்தை தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு, இந்தியா ஜப்பானிய கூட்டு உச்சி மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்திடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, JETRO தலைவர் இஷிகுரோ நோரிஹிகோ அவர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள ஜப்பான் நாட்டு நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அழைப்பு விடுத்ததற்கும், ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஆதரவிற்கும் தனது நன்றியை தெரிவித்ததுடன், சென்னையில் நடைபெறவுள்ள 2024 உலக முதலீட்டாளர் கள் மாநாடு வெற்றி பெற தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மண்டலம் 4,5,6-க்குட்பட்ட சில பகுதிகளின் குடிநீர் விநியோகம் நிறுத்தம்:

# பொதுமக்களின் அவசரத் தேவைக்கு லாரிகள் மூலம் விநியோகம்!

## சென்னை பெருநகர குடிநீர் வாரியம் அறிவிப்பு!

*சென்னை,மே.30-*

*கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தி லிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 800மிமீ விட்டமுள்ள பிரதான உந்துகுழாய் இணைப்புப் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) அயனாவரம்குன்னூர் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 31.05.2023 அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மண்டலம்-4, 5 மற்றும் 6க்குட்பட்ட தண்டையார்பேட்டை (பகுதி) பழைய வண்ணாரப்பேட்டை, இராயபுரம், புளியந்தோப்பு, பட்டாளம் பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப் படுகிறது.*

*எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://chennaimetrowater.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினைப் பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப் படும்.*

*இவ்வாறு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.*

# திரு.வி.க. நகர் - எம்.பி.எம். தெரு மயானத்தில் மேம்பாட்டுப் பணிகள்!

## தாங்கல் மயானத்தை பயன்படுத்தவும் - சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

*சென்னை, மே 30-*

*பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-*


*பெருநகர சென்னை மாநகராட்சி, திரு. வி.க.நகர் மண்டலம், கோட்டம்71-க்குட்பட்ட எம்.பி.எம். தெருவில் உள்ள மயான பூமியின் எரிவாயு தகன மேடையினை திரவ பெட்ரோலிய தகன மேடையாக (LPG) மாற்றம் செய்ய மேம்பாட்டு பணிகள் நடைபெற உள்ளதால், 31.05.2023 முதல் 30.07.2023 வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.*

*எனவே, மேம்பாட்டு பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு 67க்குட்பட்ட தாங்கல் மயான பூமியினை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு சென்னை மாநகராட்சி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள்.வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (30/05/2023 -செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி,ஸ்டாரன்ஸ் சாலை. எம்.கே.டி.மகாலில் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள்,பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் –

# மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதல் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமை!

*சென்னை, மே 30-*

*பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் பால் கொள்முதல் மற்றும் இடு பொருள் பிரிவுகளுக்கான ஆய்வுக் கூட்டம் நேற்று 29.5.2023 சென்னை நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்றது.*

*இதில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பித்தார்.*

*அனைத்து தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களிலும் செயற்கை முறை கருவூட்டல் வசதிகளை விரிவாக்கம் செய்தல். பால் உற்பத்தியாளர்கள் அனைவருக்கும் அவர்கள் வழங்கும் பாலுக்குரிய ஒப்புகைச் சீட்டு வழங்குதல். பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.*

*மாதிரி பசுந்தீவனப் பண்ணைகளை ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் உருவாக்குதல். பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு தரமான கலப்புத் தீவனம் வழங்குதல். களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.*

*அரசின் திட்டங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளுதல். பால் உப பொருட்கள், கால்நடை கலப்பு தீவனம், பால் பண்ணையில் ஆட்டோமேஷன் போன்ற பணிகளுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆய்வகங்கள் நிறுவுதல்.*

*இந்த ஆய்வுக் கூட்டத்தில், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பால் கொள்முதல் மற்றும் இடுபொருள் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*




நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.கழக சார்பில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அருகில் பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் உமாகாந்த் உள்ளிட்டோர் உள்ளனர்.